தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நீர்போக உருளைக்கிழங்கு நல்ல விலை போகும்

வேளாண்மை அமைச்சகத்தின் படி, 2015-16 ல் இந்தியாவில் உருளைக்கிழங்கு 20.85 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 440 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்யப்பட்டுள்ளது. உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். 2014 -15 ல் 460 இலட்சம் டன்களாக இருந்த உருளைக்கிழங்கு உற்பத்தி 2015 -16 ல் 440 இலட்சம் டன்களாக சரிந்துள்ளது.

உருளை உற்பத்தியில் உள்நாட்டு நுகர்வுக்கு அதிக தேவையிருப்பதால் குறைந்தளவே ஏற்றுமதி செய்யப்படுகிறது. நடப்பாண்டில் ஏற்றுமதி தேவை அதிகமாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

உருளைகிழங்கு விளையும் முக்கிய மாநிலங்களில் சாதகமற்ற பருவநிலை மற்றும் பின் கருகல் நோய் உருளைகிழங்கு உற்பத்தி குறைய காரணமாக அமைந்துள்ளது. நடப்பாண்டில் உருளைக்கிழங்கின் விலை அதிகமாகும் என்று கணிக்கப்படுவதால் அரசு இருப்பை நிலைப்படுத்துகிறது. ஏற்றுமதி தேவையும் நாட்டின் உருளைக்கிழங்கின் விலையை திடப்படுத்தும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 19 ஆண்டுகளாக நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) நிலவிய உருளைகிழங்கு விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான உருளைகிழங்கு

பண்ணை விலை அறுவடையின் போது கிலோவிற்கு ரூ.22-24 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி உருளைகிழங்கு விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலைஆராய்ச்சிநிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி 0423- 2442170

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்